**<u>பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாமாண்டு தேர்வுகளுக்கான முதன்மைத் தேர்வு மையங்களின் முதன்மைக் கண்காணிப்பாளர்களுக்கான அறிவுரைகள்:–</u>**

1. **ஆவணங்களை பதிவிறக்கம் செய்தல்**

I. பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாமாண்டு தேர்வு மையங்களின் முதன்மைத் தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள், **08.06.2020** முதல் www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று, தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள User ID, Password ஐ பயன்படுத்தி, **தங்களது மையம் மற்றும் தங்களுடன் இணைக்கப்பட்ட அனைத்து துணைத் தேர்வு மையங்களுக்கான கீழ்க்குறிப்பிட்ட ஆவணங்களை பதிவிறக்கம் செய்த கொள்ளவேண்டும்.**

1. **Centre wise Nominal Roll**
2. **Hall Seating Plan**
3. **Attendance Sheet**
4. **List of Register Numbers to be pasted on the answer script cover**
5. **C.S.D. Forms**
6. **Qn. paper distribution list for sub centres**

II. அதன்பின்னர், **வரிசை எண் 1 முதல் 5 வரை உள்ள துணைத் தேர்வு மையங்களுக்கான ஆவணங்களை துணைத் தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்களிடம் தேர்வு துவங்குவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னரே பிரித்து வழங்கிட வேண்டும். இதில்** எவ்வித தவறுகளும் நிகழாமல் கவனமுடன் செயல்பட வேண்டும்.

III. தங்கள் மையங்களுக்குரிய மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் மற்றும் முதன்மைத் தேர்வு மையம் மற்றும் துணைத் தேர்வு மையங்களுக்குரிய வினாத்தாள் கட்டுக்களை பிரிப்பது குறித்த **வரிசை எண் 6–ல் உள்ள ஆவணம் ஆகியவற்றை தங்கள் வசம்** பாதுகாப்பாக **வைத்துக் கொள்ள வேண்டும்.**

**2. முதன்மைத் தேர்வுமையத்தில் வினாத்தாள் கட்டுக்களை பிரித்தல்**

**I.** தேர்வு நாளன்று முதன்மைத் தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர் மற்றும் துறை அலுவலர் இருவரும் இணைந்து, வழித்தட அலுவலரிடமிருந்து தங்களது தேர்வு மையம் மற்றும் தங்களது மையத்துடன் இணைக்கப்பட்ட துணைத் தேர்வு மையங்களில் தேர்வெழுதும் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப தேவைப்படும் வினாத்தாள் பெட்டிகளை சரிபார்த்து பெற்றுக் கொள்ளவேண்டும். **முதன்மைத் தேர்வு மையங்களின் பெயர் மட்டுமே வினாத்தாள் பெட்டிகளில் இடம் பெற்றிருக்கும்.**

II. வழித்தட அலுவலர் வழங்கிய அனைத்து வினாத்தாள் பெட்டிகளையும் முதன்மைத் தேர்வு மையத்திலேயே பிரிக்க வேண்டும். அப்பெட்டிகளில் **20 வினாத்தாள்கள் அடங்கிய வினாத்தாள் கட்டுக்கள் (Packets) இருக்கும்.**

III. முதன்மைத் தேர்வு மையம் மற்றும் துணைத் தேர்வு மையங்களுக்குரிய வினாத்தாள் கட்டுக்களை பிரிப்பது குறித்து இணையதளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட **(Qn. paper distribution list for sub centres )** ஆவணத்தின் அடிப்படையில், முதன்மைத் தேர்வு மையம் மற்றும் துணைத் தேர்வு மையங்களுக்குரிய வினாத்தாள் கட்டுக்கள் பாட வாரியாக பிரிக்கப்படவேண்டும்.

IV. அதன்பின், தங்களது மையத்துடன் இணைக்கப்பட்ட துணைத் தேர்வு மையங்களுக்குரிய வினாத்தாள் கட்டுக்களை, அம்மையங்களில் தேர்வெழுதும் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப (பெயர் பட்டியலின் அடிப்படையில்) பிரித்து துணைத் தேர்வு மைய வாரியாக கட்டி வைக்கவேண்டும்.

V. முதன்மைத் தேர்வு மையத்தில் தேர்வெழுதும் மாணவர்களுக்கு தேவைப்படும் வினாத்தாள் கட்டுக்களையும், மீதமுள்ள வினாத்தாள் கட்டுக்களையும் (Excess) தனியே பிரித்து இரும்பு அலமாரியில் பூட்டி வைக்கவேண்டும்.

VI. எக்காரணங்கொண்டும் **20** வினாத்தாள்கள் அடங்கிய வினாத்தாள் கட்டினை **(Packet)** பிரிக்கக்கூடாது. அக்கட்டுக்கள் தேர்வறையில் **9.50** மணிக்கு தேர்வர்கள் முன்னிலையில் மட்டுமே பிரிக்கப்படவேண்டும்.

ஒம்/–

அரசுத் தேர்வுகள் இயக்குநர்